1309

Reg. No. M. 1534.

OF THE REGISTRAR OF BOOKS
4 MAR 1929

R. C. Training

School Magazine,

Trichinopoly.

திருச்சினுப்பள்ளி

திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதனு விஷயப் பூங்கொத்து.

மாதமோருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 18.	பெப்ருவரி 1929.	மலர் 8.

JL
NII PP
N29.18.8.
182280.

ந்திராதிபர் குறிப்புகள்.

15-உ காலை $8\frac{1}{4}$-மணிக்கு சென்னை
யும் கல்வி மந்திரியுமான கனந்தங்கிய
, M. A., D. C. L., LL. D. நமது

பாடசாலை சமுகந்தந்து கல்விச்சங்க வருடாந்தரக் கொண்டாட்டத்தின் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்தார்.

***   ***   ***

கண்காட்சிசாலை திறந்து வைத்ததும் அவரே. ஏனைய வருடங்களில்விட இவ்வருடம் அதிக பாடசாலைகள் பொருட்களை அனுப்பியதால் கண்காட்சி கண்டவர்களுக்கு அதிகப்பலன்களை விளைவித்தது. திருச்சி ரேஞ்சு உதவி இன்ஸ்பெக்டரம்மாள் மிஸ் D. பிரான்க் அம்மாள் B. A. யின் தூண்டுதலே இவ்வித்தியாசத்திற்குக் காரணமென்னலாம்.

***   ***   ***

மதுரை தாலுகா ஆரம்ப ஆசிரிய உபாத்திமார்களின் சங்கத்தில் அக்கிராசனம் வகித்தவர் Mr. R. G. Grieve, M. A., டைரெக்டர், கிராமக்கல்வி முக்கியமானதென்றும் கஷ்ட நிலைமைகளிலிருந்துகொண்டு உபாத்திமார் பாடசாலை நடத்துகிறார்களென்றும், சிறுவர்கள் சிறுமிகள் சீக்கிரத்தில் பாடசாலைகளை விட்டுவிடுவதால் சில வருஷம் கற்பித்த படிப்பு ஒன்றுக்கும் பயன்படாமற் போகிறதென்றும், கட்டாயப் படிப்பே இதற்கு ஒரு உபகாரமென்றும் சொல்லலாயினர்.

லோவர் கிரேட் ஒழியவேண்டுமா?

ஆரம்பப் பாடசாலைகளில், லோவர் கிரேட் ஆசிரியர்களை இனி வெகுவாய் நியமிக்க இடமில்லாதபடி செய்ய, போதனாமுறைப் பாடசாலைகளில் அவர்களைச் சேர்ப்பதில் தடைகள் ஏற்படுத்தி, கூடியசீக்கிரத்தில் லோவர் கிரேடை அடியுடன் நீக்கிவிடவும் சர்க்கார் நோக்கங்கொண்டுள்ளார். அவர்களுக்குப் பதிலாக ஹையர் கிரேட் பயின்ற ஆசிரியர்களை நியமிப்பார்களாம். அல்லது, "போதனாமுறை பயிற்சிபெற்ற உபாத்தியாயர் கிடையாவிட்டால், ஹையர் கிரேடேனும் பயில்வதற்கு லாயக்கான படிப்புள்ளவர்களை ஆரம்பப் பாடசாலைகளில் உபாத்தியாயர்களாக நியமிக்க பாடசாலை மானேஜர்கள் எத்தனிக்கவேண்டும்."—(பத்திராதிபர் குறிப்பு—ஜனவரி-மீ)

இம்முடிவிற்கு துரைத்தனம் வந்திருப்பதற்குக் காரணங்கள் எவ்வாறாலும், ஆரம்பப் படிப்பின் திறனை உயர்த்தவே

18228
சென்னை-600 008

நோக்கங் கொண்டுள்ளதென நாம் வைத்துக்கொள்ளுவோம்; நாம் அனைவரும் விரும்புவதும் இதுவேயாகும். மெய்யாகவே இக்காலங்களில் லோவர் கிரேடில் சேர்ந்து பயிலவருகின்ற ஆசிரிய மாணவர்களது யோக்கியதை வெகுவாய் குறைந்திருக்கிறதென்பதில் ஐயமில்லை.

போதனுமுறைப் பாடசாலையில் 15 வருஷகாலமாய் ஆரம்ப ஆசிரியர்களைப் பயிற்றுவதில் ஈடுபட்டுள்ள எம்போன்றவர்களது அநுபவ சித்தாந்தம் யாதெனின், சில வருஷங்களாகவே லோவர் கிரேட் பயிலவரும் மாணுக்க ஆசிரியர்களது கல்வித்திறமை வருஷத்துக்கு வருஷம் குறைந்துகொண்டே வருகின்றதென்பதாம்; அதாவது, சற்றுத் தெளிவாய்க் கூறவேண்டுமானுல் பழைய பிரைமரி பரீக்ஷை தேறினவர்கள், அல்லது பழைய ரிசல்ட் கிராண்ட் ஒழுங்கில் (Result grant system) பிரைமரி படிப்பு முடித்தவர்கள், அல்லது பழைய நான்காவது வகுப்பு பரீக்ஷை தேறினவர்களாகிய அன்னோர்களது கல்வித்திறமையைவிட தற்காலத்திய 5-வது வகுப்பு பரீக்ஷை தேறியவர்களாகப் பாவிக்கப்படுவோர், அல்லது அந்தப் படிப்பைப் பெற்றிருப்பதாக அத்தாக்ஷிப் பத்திரம் ஒன்றைப் பெற்றிருக்கிறவர்கள் முதலியவர்களது கல்வி யோக்கியதைகள் வருஷத்துக்கு வருஷம் குறைந்துகொண்டே போகின்றது என்பதாம்.

182280.

நமது கல்வி இலாகா இவ்விஷயத்தைக் கண்டுபிடித்து, குற்றம் எங்கே, குறை எதில், மாணவர்களின் திறமை வருஷத்துக்கு வருஷம் உயராவிடினும் போதுமான திறமையாவது அமைந்திருக்கிறதா, என்ற பரிசீலனைகளைச் செய்துள்ளதா? ஒரே வார்த்தையில், ஆழ்ந்த ஆராய்ச்சியின் பின்னரே "ஆரம்பப் பாடசாலைகளில் ஹையர் கிரேடானும் பயில்வதற்கு லாயக்கான படிப்புள்ளவர்களை நியமிக்கவேண்டும்" என்ற கொள்கையைக் கைக்கொண்டதா?

வருஷாவருஷம் ஆரம்பப் பாடசாலைகளும், அவற்றில் படிக்கும் பிள்ளைகளின் தொகையும் அதிகரிக்கவேண்டியது நியாயந் தானே! (கட்டாயக் கல்வித்திட்டம் ஓர்புறத்தில் இருக்கின்றது.) உயர்தரப் படிப்பு (Secondary education) ஏழைகளுக்கு சாத்தியமான படிப்பா? ஹையர் கிரேடாவது படிக்க லாயக்குள்ளவர்கள் சாதாரணமாய் உயர்தரப் பாடசாலைகளில் (Secondary Schools) படித்தவர்கள்தானே! உயர்தரப் படிப்பைப் படித்தவர்கள் நமது உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டு கிராமங்கள் முதலிய பிரதேசங்களுக்கு போதுமான

அளவில் வரப்போகின்றனரா? ஆரம்பப்படிப்பு நகரங்களில் விருத்தியடைவதுபோல, கிராமங்களிலும் விருத்தியாக வேண்டுமே!

லோவர் கிரேடாவது பயிற்சிபெற்ற ஆசிரியர்களைக்கொண்டு நடத்தும் ஆரம்பக்கல்வியின் திறமையே பற்றாதெனக் கூறும்போது, பயிற்சி ஒன்றும் பெறாத ஆசிரியர்களை (உயர்தரப் படிப்பாளிகளானாலும் அவர்களை) நியமித்து படிப்பின் திறமையை விர்த்திசெய்ப உத்தேசமா? ஆரம்பக்கல்வி ஒரு தேசத்தில் ஓங்கியிருப்பதற்கு அப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கைகளை மாத்திரம் கவனித்தல் பொருந்துமோ?

போதனாமுறைகளைக் கற்றுக்கொள்ளாத ஆசிரியரிடம் ஒப்படைக்கப்படும் பிள்ளைகள் எவ்வளவு முன்னேற்றம் அடைவார்களோ! அன்றி, உபாத்திமைத்தொழிலை ஏற்றுக்கொள்ள வருகின்றவர்கள் அநேகமாய் வேறு செயலற்றவர்களாய் இருக்க, அவர்களது கேவலமான தற்காலத்திய ஊதிய அமைப்பை அறிந்தவர்கள், செக்கண்டரிப் படிப்பைப் படித்து இத்தொழிலை ஏற்றுக்கொள்ள முற்படுவார்கள் என்ற நம்பிக்கையா?

தற்காலத்துள்ள ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளைப் பயிற்றும் லோவர் கிரேட் பயின்ற ஆசிரியர்கள் தங்கள் கடமைகளை நன்றாய் நிறைவேற்றுகின்றார்களா இல்லையா என்ற விஷயமாய் கல்வி இலாகா போதுமான ஊக்கம் செலுத்தி கிராமம், நகரம் முதலிய இடங்களிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு அந்தந்த வகுப்புக்கேற்ற அறிவு இலாகாவின் சட்டதிட்ட கிரமங்களுக்கு ஏற்றவாறு கண்டிப்பாய் அமைந்திருக்கிறதென்றும், மேல்வகுப்புகளுக்கு பிள்ளைகளை மாற்றுவதில் விசேஷ தணிக்கைகள் நடைபெறுகின்றனவென்றும், இதுபோன்ற பிள்ளைகளின் அபிவிருத்திக்கான முறைகள் கையாடப்படுகின்றனவென்றும் திருப்தியடைந்தபிறகு, துரைத்தனம் லோவர் கிரேடை ஒழிக்கவேண்டுமெனக் கூறுமானால் நல்லதாகும்.

T. S. Ganapathi Aiyer,
1st Assistant,
R. C. Boarding & Training School, Trichinopoly

சந்தாதார் பக்கம்.

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தின் இடது பக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

தாவரநூல் அநுசாரம்.

பூவில் பிஞ்சு உண்டாகும் விதம்.

புஷ்பம் நன்றாய் மலரும்பொழுது கேசரத்திலுள்ள மகரந்தப் பையினின்றும் மகரந்தம் பக்குவம் அடைந்து வெளிக்கிளம்பும். இம்மாதிரியாக புஷ்பங்கள் மலர்ந்தவுடன் அண்டகோசம் பக்குவமடைந்து கீலாக்ரத்தில் ஒருவித பசையுண்டாகி இருக்கும். அன்றியும் கீலாக்ரம் மேடும் பள்ளமுமாக இருக்கும். பக்குவம் அடைந்த மகரந்தப்பொடி பூச்சிகளினாலோ வேறு எந்தக் காரணத்தினாலோ கீலாக்ரத்தின் சமீபம் போனால் அப்பொடி அங்குள்ள செடியில் ஒட்டிக்கொண்டு மேடும் பள்ளமுமாகவுள்ள அந்த இடத்தில் தங்கிவிடும். இவ்வாறு தங்கிய மகரந்தப்பொடி உயிர் உள்ளது. ஆகையால் விருத்தியடைந்து கீலத்தைத் துளைத்துக்கொண்டு அண்டாசயத்தில் புகுந்து அங்குள்ள பக்குவம் அடைந்து இருக்கிற அண்டங்களின் ஜீவ அணுக்களோடு பேதமறக் கலந்துவிடும். இதற்கு "கருத்தரித்தல்" என்று பெயர். இக்கருத்தரித்தபிறகு அண்டங்கள் அனைத்தும் விதைகளாகவும் அண்டாசயம் கனியாகவும் விருத்தியடையும். இதன்பிறகு கீலம், கீலாக்ரம் விழுந்துவிடும்.

செடிகளின் வர்க்க விருத்தி.

விதை: செடிகள் பெரும்பாலும் விதைகளிலிருந்தேயுண்டாகின்றன. நாம் பயிர்செய்யும் செடிகள் சாதாரணமாய் அவ்வகையானவை.

நாற்று நடுதல்: நெல், ராகி, கேழ்வரகு, மிளகு, புகையிலை முதலிய பயிர்களை முதலில் விதை விதைத்து, நாற்று பக்குவமாக வளர்ந்தபிறகு அவைகளை நட்டுப் பயிர்செய்கிறார்கள்.

நாற்றுக்களைச் செழிப்பான நாற்றுங்கால்களாக விடுவதால் அந் நாற்றுக்கள் நன்றாய் வளரும். இந்நாற்றை செழிப்பற்ற இடங்களில் நட்டாலும் நன்றாய் வளரும். இதுவே, நடுவதனால் ஏற்படும் முக்கிய குணம். அன்றியும், பயிர்கள் நாற்றுங்கால்களில் அதாவது பந்தோபஸ்தான இடங்களில் கொஞ்ச காலம் வளர்ந்துவிடுகிறபடியால் நட்டபிறகு அதைப் பாதுகாக்க வேண்டிய காலம் அதற்குத்தக்கபடி குறைகிறது. அன்றியும், விதைத்துப் பயிர்செய்தால் அப்படிப்பட்ட வயல்களில் பயிர்கள் சமமாக இரா. சில இடத்தில் கும்பலாகவும் சில இடத்தில் காலியாகவும் இருக்கும். ஆனால் நட்டுப் பயிர்செய்தால் எங்கும் ஒரே வரிசையாக இருக்கும்.

பதியன்போடல்: மாதுளை, ரோஜா முதலிய செடிகளை அவைகளின் தூற்றிலிருந்து ஒரு செடியை வளைத்து அதன் நடுப் பக்கத்தை மண்ணில் பதியும்படிசெய்து நுனிப்பக்கத்தை வெளியே விட்டுவிடுகிறார்கள். மண்ணில் பதிந்துள்ள இளந்தண்டின் பாகத்தில் ஒட்டுவேர்கள் உண்டாகும். இந்த வேர்கள் உண்டானபிறகு தாய்ச்செடியோடு சேர்ந்திருக்கும் தண்டின் பாகத்தை வெட்டிவிட்டால் வளைத்த தண்டே புதுச்செடியாக ஆய்விடும். இப்புதுச்செடியானது வேரோடு இருப்பதால் அதை எங்கே கொண்டுபோய் நட்டாலும் தவறாமல் வளரும். அன்றியும் விதையிலிருந்து உண்டாகும் செடியைவிட இச்செடி அதிக சீக்கிரத்தில் பலன்தரும். ஏனெனில் ஒட்டுச்செடியைப்போல் இதுவும் முதிர்ந்த கிளையிலிருந்து உண்டாகிறது.

துண்டு நடுதல்: விதைக்கு அடுத்தபடியாகத் துண்டு நடுவதினாலேயே அநேக செடிகள் உண்டாகின்றன: (உ-ம்.) கரும்பு, ஆள்வள்ளி (மரவள்ளி), சர்க்கரைவள்ளி, வெற்றிலை, இஞ்சி, மஞ்சள் முதலியன. இவைகளெல்லாம் துண்டு நடுவதினாலேயே உண்டாகின்றன. இத்துண்டுகளின் கணுக்களில் ஒட்டுவேர் உண்டாகி அத்துண்டுகள் புதுச்செடிகளாக மாறி சீக்கிரத்தில் பலனைக் கொடுக்கின்றன. சாப்பாட்டு முருங்கையை விதையிலிருந்து பயிர்செய்தால் பலனை அடைவதற்குச் சில வருஷங்கள் ஆகும். முதிர்ந்த கிளை ஒன்றை வெட்டி நட்டால் அது உடனே பலனைத் தரும்.

சில செடிகள் தங்கள் உணவை தங்கள் வேர்களில் சேர்த்து வைத்துக்கொள்ளுகின்றன: (உ-ம்.) இஞ்சி, மஞ்சள், உருளைக் கிழங்கு, வாழைக்கிழங்கு, சேம்பு முதலியனவாம்.

சில செடிகள், தங்களுக்கு வேண்டியதுபோக மிகுந்த உணவை இலைகளில் சேர்த்துவைத்துக்கொள்ளுகின்றன. அதனால் இலைகள் தடித்து சதைப்பற்றுள்ளதாக இருக்கும்.

(உ-ம்.) வெங்காயம், பூண்டு; விஷமூங்கில் முதலியன.

M. K. Subramanyan,
Higher Senior,
R. C. B. & Training School, Trichinopoly.

தோண்டப்ப நாயக்கரும் புலவரும்.

முன் ஒருகாலத்தில் இராமனாதபுரம் ஜில்லாவில் ஓரூரில் தொண்டப்ப நாயக்கர் என்ற ஒரு பிரபு இருந்தார். அவர் ஒரு நாள் வரகு அம்பாரமாய்க் குவித்துவைக்கப்பட்டிருந்த களத்தில் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அச்சமயம் ஒரு புலவர் பெருமான் அவரையணுகி,

"கோவைப்பழத்தைப்போல் சிவந்த நாயக்கரே
குன்றுமணியைப்போல் சிவந்த நாயக்கரே
காவிக்கல்லைப்போல் சிவந்த நாயக்கரே
கண்டப்ப நாயக்கரே தொண்டப்ப நாயக்கரே"

என்றார். இக்கவியைக் கேட்டு ஆனந்தங்கொண்ட நாயக்கர், ஒரு பணியாள்வசம் பரிசாக ஆறு மரக்கால் வரகை ஒரு சாக்கில் கட்டுவித்துப் புலவருடன் அனுப்பினார்.

புலவர் சென்ற சற்றுநேரத்தில் மற்றுமோர் புலவர் நாயக்கர்முன் தோன்ற, அவரை நோக்கிய நாயக்கர்: "ஐயா! புலவரே, உமக்குமுன் ஒரு புலவர் வந்து, 'கோவைப்பழத்தைப்போல்... ....தொண்டப்ப நாயக்கரே' என்று என்மீது கவிபாடிப் பரிசுபெற்றுச் சென்றார்" என்றார்.

முதற்புலவர் பாடிய பாசுரத்தைக் கேட்ட இரண்டாம் புலவர் நாயக்கரை விளித்து, "பிரபு, அவர் பாடிய பாசுரத்தில் குற்றம் உண்டு" என்க, நாயக்கரும் ஆத்திரத்துடன் அக்கவியிலுள்ள குற்றத்தை எடுத்துரைக்கும்வண்ணம் புலவரை வேண்டப் புலவரும், கோவைப்பழத்தில் காம்புக்குப் பக்கம் சற்று பசியதும், குன்றுமணியில் ஓர் பாகத்தில் கறுப்புங் கலந்த பொருட்களைத் தங்களின் அழகிய மேனிக்கு ஒப்பிட்டுப் பாடியிருப்பது ஒவ்வுமா? இது குற்றமல்லவோ" என்றார்.

JL
30211, M11PP
N29·18
182280
சென்னை 600 008

இதைக்கேட்ட சிவந்த நாயக்கர் சினங்கொண்டவராய், முதற்புலவரை அழைத்துவரும்படி ஆளனுப்ப, அப்புலவரும் சிறிதுநேரத்தில் நாயக்கர்முன் தோன்ற, நாயக்கரும் அவரைப் பார்த்து, "புலவரே! கோவைப்பழத்தில் பச்சையும், குன்றுமணியில் கறுப்புங் கலந்திருப்பதை நீர் அறியாமல் மாசுபட ஏன் பாடினீர்?" என்றார்.

முதற்புலவர்: அம்மாசை நீக்கவே காவிக்கல்லையும் கவியிற் சேர்த்துள்ளேன்.

நாயக்கர்: காவிக்கல்லைச் சேர்த்ததின் காரணம் என்ன?

முதற்புலவர்: கல்லில் சிறிது நீர்வார்த்து அதில் காவிக்கல்லை உரைத்துப் பச்சையுங் கறுப்புமுள்ள பாகத்தில் பூசிவிடுவதற்கே.

இவ்வுரையைக் கேட்ட நாயக்கர் மகிழ்ந்தவராய் பின்னும் ஆறு மரக்கால் வரகை முதற்புலவருக்குப் பரிசாக அளித்து அனுப்ப, இரண்டாம் புலவர் நாணத்தால் தலைகுனிந்தவராய் வீடு போய்ச் சேர்ந்தார்.

சூ. ஆரோக்கியசாமி,
போர்டு பெண்பாடசாலை, மானாமதுரை.

கிராம உபாத்தியாயரும் அவருடைய ஊழியமும்.

நல்லாசிரியன் செய்யவேண்டிய விஷயங்கள்:—

(1) உபாத்திமைப் போதனு ஊழியம் செய்ய விரும்புவோர் உலகினர்க்கு உபயோகத்தையும், தெய்வத்துக்குப் புகழையும் படைக்கத்தக்க பிரகாரம் ஜீவிக்க விரும்புவாராயின் தாங்கள் டிரெயினிங் ஸ்கூல் போய் போதனுமுறையைக் கற்றுக் கொள்ளும்படி முயலவேண்டும்.

(2) ஏற்கனவே அவ்வித ஊழியத்தின் யோக்கியதா பத்திரங்களை அடைந்தவர்கள் முன் வேலை பார்த்துப் போயிருக்கும் ஆசிரியர்களைப்போல் பிள்ளைகளின் அறிவைக் கெடுக்காதபடி முயற்சிசெய்யவேண்டும். (உ-ம்.) களிமண் பசுவைக் காட்டி பசுவின் பால் வெள்ளையாயிருக்குமென்றும், செம்மண் கத்தரிக்காயால் கறி சமைக்கலாம் என்றும், மணலைக் காட்டி அரிசி சாப்பாட்டிற்கு நலம் என்றும், கடுதாசியின் தோணியைக் காண்பித்து தண்ணீரில் பிரயாணம் செய்யலாம் என்றும், யானை, ஒட்டை, சிங்கம் முதலிய மிருகங்களைக் கடுதாசியில் வரைந்து ஆணிகளில்

பாட்டலாம் என்றும், இரையே தின்னுமல் இருப்பது, வேலை செய்யாமலிருப்பது முதலிய மோசம் போதிக்கும் அறிவை நல்லறிவாக மாற்றுவோமாக. எப்போதும் பிள்ளைகளை இட்டுப் போய்க் காட்டி பயிற்றுவிப்பது நல்ல ஏற்பாடாகும்.

(3) பள்ளியில் அவசியமாய் சுகாதார விஷயங்கள் போதிக்கப்படவேண்டும்.

(4) நாம் ஒவ்வொருவரும் மூன்று மாதங்கட்கு ஒருமுறை யாவது பிள்ளைகளின் பெற்ரேருள் சிலரையும், இன்னும் மற்ற பெரியோர்களையும் வைத்து உபன்னியாசங்கள் செய்து வருஷம் ஒருமுறையாகிலும், பல சின்னஞ்சிறு பரிசுகள் அளிக்கத்தக்க முயற்சிகள் எடுத்துக்கொளல்வேண்டும். இவ்வாறு செய்யின், ஏராளமான பிள்ளைகள் பள்ளியில் சேர்வார்கள்.

(5) ஒருவர் ஆத்திச்சூடி, மூதுரை, பழமொழி முதலிய செய்யுட்களை தாளத்துடனும், இராகத்துடனும் பாடச்செய்வதால், கேட்போருக்கு இன்பத்தையும் தமக்கு பயனையும் கொடுக்கும் என்பது திண்ணம். ஆதியாகமக் கதைகள், சுவிசேஷ உபமான அபிநயக் கீர்த்தனைகள், இராஜ வாழ்த்து, தெய்வ ஸ்துதி இவைகளைப் பழக்குவதால் அப்பிள்ளைகளின் மூன்ருவது கண்ணுகிய ஞானக் கண்ணைத் திறந்ததாகும்.

(6) பள்ளியின் மேற்கூரை, சுவர், இரும்பு வேலை, களம் முதலியவைகளைக் காண்பித்து, மேற்படி வேலைசெய்த தச்சர், கொத்தர், கொல்லர் முதலியோர்களுடைய பட்டரைகளுக்குப் பிள்ளைகளை இட்டுக்கொண்டுபோய் அவர்கள் செய்யும் வேலையின் மகத்துவத்தையும், அற்பமாக நாம் எண்ணும் அக்கினி, தண்ணீர், மண் முதலியவைகளிளுல் பிரமாண்டமான வேலைகள் நடைபெறுகிறதெனும் இரகசியத்தையும் வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும்.

(7) சாமானிய கிராமங்களுக்கு அணிகலமாகிய முனிசீப்ப, போலீஸ் கச்சேரி, பஞ்சாயத்துக் கோர்ட்டு, தபால், தந்தி, ரிஜிஸ்ட்ரேஷன் முதலிய பகிரங்கசாலைகளைக் காட்டுவதால் பிள்ளைகளுக்கு குடி, களவு, கொலை, அதனுல் ஏற்படும் தண்டனை இன்னதென்றும் நம் நாட்டிற்குள்ளும் அந்நிய தேசங்கட்கும் சங்கதிகள், பணம், பொருட்கள் எவ்வளவு இலகுவாக அனுப்பப்படுகின்றனவென்றும், படிப்பற்ற பாமர மக்கள் எவ்வண்ணம் விரல் முத்திரை இட மாத்திரம் அறிவதால் மோசம்போகிருர்கள் என்றும் எளிதில் கற்பிக்கவேண்டும்.

(8) மலை, நதி, ஏரி, கடல் இவைகளைப் பார்வையிடச் செய்வதால், மனிதர் உபயோகத்திற்கு எம்பெருமான் அமைத்து இருப்பதையும், அவற்றின் உபயோகத்தையும் பிள்ளைகளுக்கு சுலபமாய்ப் புகட்டவேண்டும்.

(9) தாங்கள் மாதாமாதம் நடைபெறும் உபாத்தியாயர்களுடைய மாதக்கழகங்களை அலக்ஷியம் செய்யாமல் ஷை கூட்டத்தின் நற்போதகங்களையும் கையாண்டுவரல்வேண்டும்.

D. T. Thangaraj,
Higher Junior,
R. C. Training School, Trichinopoly.

மூங்கில்.

தன்மை: மூங்கிலானது புல்லினத்தைச் சேர்ந்தது. இவை பெரும்பாலும் உஷ்ண தேசங்களில் தனித்தனிக் கொத்துகளாகவும், காடுகளாகவும் வளரும். வரண்ட மணற்பாங்கான இடங்களில் 10 அடி உயரமும், மணல் கலந்த சதுப்பு நிலங்களில் ஏறக்குறைய 100 அடி உயரமும் வளரும்.

கொத்தாக வளரும் மூங்கில்களில் ஒரே அடிமரத்திலிருந்து தனித்தனிக் கம்புகள் வெளிக்கிளம்பும். இவை நீண்டும், உருண்டும், வரவரக் குவிந்தும் வரும். இவைகளினிடையே காணப்படும் கணுக்களில் வேர் கிளம்பி நிலத்தை எட்டாதிருக்கும். மேற் கணுக்களில் சிறு கிளை கிளம்பி இருக்கும். மூங்கிலின் வெளிப்புறம் கெட்டியாயும் வழவழப்பாயும், உட்புறம் மெதுவாயும், குழாயாகவும் இருக்கும். இளமூங்கில்கள் நேராகவும், முதிர்ந்தவை தலைதொங்கி வளைந்தும் இருக்கும். கும்பலாக வளரும் மூங்கில்கள் காற்றினால் ஒன்றோடொன்று உறைந்துகொண்டு தேய்ப்பின் உஷ்ணத்தால் நெருப்புப் பிடித்துக்கொள்வதுண்டு. வண்டுகள் துளை பறித்து குழாய்ப் பாகங்களில் வசிக்கும். இந்த வண்டுத்துளைகள் உள்ள மூங்கில்களில் காற்று வீசினால் காதுக்கினிமையான ஓசை உண்டாகும். இதிலிருந்தே புல்லாங்குழல் என்ற இன்னிசைக்கருவி முதல் முதல் கண்டுபிடிக்கப்பட்டதென்பர் உண்டு.

ஒருதரம் பூ விட்டுவிட்டால் மூங்கிலின் வளரும் ஆற்றல் அத்தோடு குன்றிவிடும். அது மறுபடியும் சேர்ந்து பூ, விதை முதலியவற்றைப் பெற 32 வருஷங்கள் பிடிக்கும். ஆதலின் 32 வருஷங்களுக்கு ஒருதரந்தான் மூங்கில் பூ விடும். இதன் இலைகள் சிறியவையாய் இருக்கும்.

பலவிதத்தில் மூங்கில் உபயோகப்படுகின்றது. மூங்கிலை வெட்டி எடுத்து கணுக்கள்தோறும் செதுக்கி அருமையான வேலைகளுக்கு உபயோகிக்கலாம். பந்தல்களுக்கான கால்கள், தூக்கும் தண்டுகள், வீட்டிற்கு மேலே போடும் குறுக்குச் சட்டங்கள், கொடிகட்டும் மரங்கள், ஈட்டி முதலியதுபோன்ற ஆயுதங்களின் கைப்பிடிகள், சிறு ஓடைகளின்மேல் கட்டும் பாலங்கள், ஏற்றத்தின் அவயவங்கள் முதலிய இன்னும் அநேக வேலைகளுக்கு முழு உபயோகமாகின்றன. முழு மூங்கில்களைத் துண்டுசெய்து ஏணித் தண்டுகளாகவும், நெசவு, பாய் பின்னுவதற்கு உதவியாகவும் உபயோகிக்கலாம். மூங்கிலின் சிறு கிளைகள் கைப்பிடிகளாகவும், மாடடிக்கும் குச்சியாகவும், முள்ளோடுகூடிய சிறு கிளைகளைச் சேர்த்து காவலுக்கு அவசியமான வேலிகளாகவும் உதவுகின்றன. மூங்கில்களாலேயே ஒரு வீடு கட்டிவிடலாம்.

மூங்கிலை பல சிறு பாகங்களாகப் பிளந்து தட்டிகள் பின்னலாம். இன்னும் சிறிதாகப் பிளந்து வீட்டுக்கு உபயோகமான பாய், கூடைகளை முடையலாம். இவைகளில் எளிதில் நெருப்புப் பிடிக்காது. நெருப்புப் பட்டவிடம் கருகிவிடும். பெரு மூங்கில்களை இரண்டாகப் பிளந்து, கணுக்களைக் களைந்து தண்ணீர் ஓடும் குழாயாக உபயோகிக்கலாம். புல்லாங்குழலும், ஏணிப் படிகளும், சிலவிடங்களில் தண்ணீர் குடிக்கும் பாத்திரமாகவும் செய்துகொள்வார்கள். மூங்கில் இலைகள் நெசவுக்கும், அதன் குருத்துகள், விதைகள் உணவுப்பொருளாகவும் உபயோகிக்கப்படும். இப்படியாக மூங்கில் அநேகவிதமாக உபயோகப்படுகிறது.

K. Maria Sebastian,
Higher Junior,
R. C. B. & Training School, Trichinopoly.

நரக தர்பார் (தொடர்ச்சி).

லூசிராஜன்-வேலையளித்தல்.

(நொண்டிச்சிந்து.)

ஆங்காரப் பேய்களெல்லாம்—நல்ல
ஆசியா கண்டத்தில் வசிக்க வேணும்
ஆறுதலை பேய்க ளெல்லாம்—நல்ல
ஐரோப்பா கண்டத்தி லிருக்க வேணும்
அரணைவால் பேய்களெல்லாம்—நல்ல
அமெரிக்கா கண்டத்தில் வாழ வேணும்

ஆளிவாய் கூளி யெல்லாம்—நல்ல
ஆப்ரிக்கா கண்டத்தில் வசிக்க வேணும்
ஆட்டுத்தலை பேய்களெல்லாம்—நல்ல
ஆஸ்ட்ரேலியா கண்டத்திற்குப் போகவேணும்.

வசனம்:—அடாய் பொடியான்காள்! இப்படி ஒவ்வொரு கண்டத்திற்கும் நீங்கள் சென்று, அங்கு செய்யவேண்டிய வேலைகளைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

(நொண்டிச்சிந்து.)

சிங்கப் பல்லு பேய்க ளெல்லாம்—நல்ல
செபதபம் செய்வோரைக் கெடுக்கவேணும்.
கூகை முகப் பேய்க ளெல்லாம்—நீதி
கோர்ட்டினில் ஓரஞ்சொல்லிக் கெடுக்கவேணும்.
கோணக்கால் பேய்களெல்லாம்—தண்ணீர்
குளக்கரை மேற்குந்தி யிருக்கவேணும்.
கூன்முதுகு கூளியெல்லாம்—உச்சிக்
கோபுரத்தின் மேலிருந்து கெடுக்கவேணும்.
ஒற்றைக்கண் கூளியெல்லாம்—நல்ல
ஊரில் கலகங்கள் மூட்டவேணும்.
நெற்றிக்கண் பேய்களெல்லாம்—பிரியா
நேசர்கள் நடுவில் இருக்கவேணும்.
தொந்திவயிறு கூளியெல்லாம்—இளந்
தோகையென்ற மாதரைக் கெடுக்கவேணும்.
வால்நீண்ட பேய்களெல்லாம்—நல்ல
வாலிபரை யடுத்துக் கெடுக்கவேணும்.
பெருந்தலைப் பேய்களெல்லாம்—குருக்கள்
பிரசங்கம் கேட்பவரைக் கெடுக்கவேணும்.
செங்கண்ணு கூளியெல்லாம்—தேர்
திருவிழா கூட்டத்தில் இருக்கவேணும்.
கோமாளி பேய்களெல்லாம்—நல்ல
கூத்தாடும் மேடையில் வசிக்கவேணும்.

வசனம்:—அடா கூளி! நான் கடவுளுடன் சபதம்போட்டு வந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? நாமிருந்த அந்த மேலான பதவியில்—கேவலம் நரமனிதன் வசிக்கும்போது நாம் பார்த்தால் சகிக்கமுடியுமா? ஜாக்கிரதை: மோக்ஷத்தைக் காலி செய்து, நமது நரக ராஜ்யத்தை நிரப்பவேண்டும். அப்படிச் செய்தால்தான் என் சபதம் நிறைவேறும். உலகம் முடியுமட்டும் நமக்கோ சிறிதும் ஒழிவில்லை. ஒரு விநாடிப் பொழுதும் வீண்

காலம் போக்கக்கூடாது. நான் தெரிவித்தபடி உங்கள் வேலைக்குச் செல்லுங்கள். ஆனால் இன்றைக்கு முதலாவதாகச் செய்ய வேண்டிய வேலை ஒன்று உண்டு. அதாவது :—

அக்கிரமிகளை வதைக்க கடவுள் உத்திரவளித்திருக்கிறார். ஆதலால், தீரவிசாரியாமல் யோசேப்பைத் தண்டித்த போத்திப்பாரை, அவன் உத்தியோகத்தினின்றும் நீக்கிவிடும்படி அரசன் மனத்தில் புகுந்து ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டாவது: அவன் வீட்டிலுள்ள சகல பொருள்களையும் திருடர்களை ஏவி களவாடவேண்டும். மூன்றாவது: யோசேப்பின்மேல் இல்லாத பழியை மூட்டிய போத்திப்பார் மனைவியின் தேகத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் கோடி புழுக்களாக வடிவெடுத்துப் புகுந்து குடைந்து, துளைத்து குஷ்டவியாதியால் உபாதிக்கவேண்டும்: அதன்பிறகு உங்கள் வேலைக்குப் போகலாம். (மறைவு.)

S. Aruldass,
Viriyur.

(கும்மி வர்ணமெட்டு.)

1. வாருங்கள் வாருங்கள் தோழிகளா நாம்
வளைந்து கும்மி யடிப்போமே
வாருங்கள் காட்டுவோம் பெண்டுகள் செய்கின்ற
பற்பல வேலையுந் தோழிப் பெண்காள்.

2. தண்ணீர் இறைக்கிற பெண்ணையும் பார் அவள்
தாம்புக்கயர் விடும் வேடிக்கை பார்
தண்ணீர்க் குடத்தை இடுப்பில் வைத்து அவள்
ஏகிறாள் வீட்டுக்குத் தோழிப் பெண்காள்.

3. பாண்டம் பாத்திரம் விளக்கிடுவாள் அவள்
பளிங்கு போலத் துலக்கிடுவாள்
கண்டவர் மெச்சிட வீட்டு ஜாமான்களை
காட்சியாய் வைப்பாளாம் தோழிப் பெண்காள்.

4. உலை அடுப்பிலே ஏற்றி வைத்துப் பின்னும்
ஒடித் தடுப்பில் விறகு மாட்டி
தலையை சாய்த்து அரிசி அரிக்கின்ற
சாயலைக் காட்டுவோம் தோழிப் பெண்காள்.

5. அள்ளி மிளகாயும் மல்லியும் மஞ்சளும்
அம்மிமேல் வைத்து அருகிருத்தி
தள்ளிக் குழவியைத் தானாய் அறைக்கின்ற
சாயலைக் காட்டுவோம் தோழிப் பெண்காள்.

6. இடது காலையும் முன்னே வைப்பாள் அவள்
இன்னொரு காலையும் பின்னே வைப்பாள்
கடவுலக்கையைக் கைப்பிடித்து அவள்
குனிந்து குத்துவாள் தோழிப் பெண்காள்.

7. சல்லடை கொண்டு சலிப்பாளாம் முறந்
தன்கையில் கொண்டு புடைப்பாளாம்
மெல்லிய தவிட்டைக் கூடையில் வாரி
விற்பாளாம் அவள் தோழிப் பெண்காள்.

Arockiamary Arulanandam,
Higher Grade,
R. C. Girls' Training School,
Trichinopoly.

கதைக்குச் சம்பந்தமான பாடல்கள்.

குள்ளநரியும் மேளமும்.

('பச்சைப்பாசி பவளப்பாசி' என்ற பாடலின் சந்தம்.)

1. தோட்டத்துக்குள் குள்ளநரி ஒன்று வந்ததுவாம்;
தூரத்திலே ஒரு கோழி மேயக்கண்டதுவாம்.
நாட்டத்துடன் அதன்மேலே நரியும் பாயும்போது
நடுமரத்தில் மேளச்சத்தம் டமடமென்றதுவாம்.

2. அண்ணாந்து மேலேபார்த்து அதை மிருகமென்றும்
அஃது தன்னைக் கண்டதினால் சத்தமிட்டதென்றும்
எண்ணத்துடன் மேலேறி மேளத்தின்மேல் குந்தி
இரண்டு பக்கமும் மேளத்தோலைத் துண்டுதுண்டாய்க்
[கிழித்து

3. ஒன்றுமில்லாப் பொருளை நம்பிக் கொழுத்த கோழியை
[இழந்தேன்
ஓடிப்போன கோழியை நான் தேடி எப்படிப்பிடிப்பேன்
என்றுசொல்லிக் குள்ளநரி ஏமாந்திருந்ததுவாம்
இல்லாத பொருளை நம்பி இருப்பதைத் தோற்காதே.
(தோட்.)

எலிப்டோறியிலகப்பட்ட குரங்கு.

('அங்கம் நீண்டு அழகாய் வளர' என்ற பாட்டின் சந்தம்.)

1. தோட்டக்காரன் எலிப்பொறியை
   தூரத்து வேலியில் மறைத்துவைத்தான்.
   காட்டுக் குரங்கு அதைப் பார்த்து
   கண்டு அறிய வேண்டுமென்று

2. வேலிக்குள் நுழைந்து அவ்விடத்தை
   மெதுவாய்க் காலால் தடவிப்பார்க்க
   காலொன்று பொறியில் மாட்டிக்கொண்டு
   கத்திச் சத்தம் போட்டதுவாம்.

3. ஓடிவந்த தோட்டக்காரன்
   உடனே குரங்கைத் தப்பவிட்டான்.
   மூடன்போலெவ் விஷயத்திலும்
   முன்னுக்குத் தலையிடலாகாதே. (தோட்ட.)

ஓநாயும் கோக்கும்.

('கண்மணியே இன்னுந் தூக்கமா' என்ற பாடலின் சந்தம்.)

1. ஆட்டுக்குட்டி யொன்றைக் கொன்றோநாய்—ஆத்திரமுடன்
   நாட்டமாய்ப் புசிக்கும்போது—நன்றாயதன் தொண்டையில்
   மாட்டிய எலும்பையெடுக்க—மாட்டாமலோநாய்

2. சென்று ஓர் கொக்கினிடத்தில்—அண்டிப்பணிவாய்
   தொண்டையி லுள்ளெலும்பை—துரிதமுடன் எடுப்பாயானால்
   தந்திடுவேன் நல்ல வெகுமானம்—தாராளமுடன்

3. என்ற சொல்லைக் கொக்கு நம்பியே—இரக்கங்கொண்டு
   தன்னீண்ட கழுத்தையதன்-தொண்டையில் விட்டெலும்பை
   துன்பம் நீங்க மூக்கினால் எடுத்து—பின் வெகுமதியை

4. அன்புடனே கேட்டதாங் கொக்கு—அதற்கு ஓநாய்
   என்னுடைய வாயினுள்ளே—உன் கழுத்து நுழைந்தபோது
   தந்திரமாய்க்கடித்து விழுங்காமல்—தயவாய் விட்டேன்

5. நிற்பாயானால் பக்ஷணஞ் செய்வேன்—அப்புறஞ் செல்வாய்
   அற்பன் பதிலுபகாரம்—அன்புடனே செய்வானென்று
   எப்பொழுதும் நம்பலாகாதாம்—இப்புவிதனிலே. (ஆட்டு.)

பாலர்க்கேற்ற நீதி வாக்கியங்கள்.

26. கந்தையாயினுங் கசக்கிக் கட்டு.
27. காலத்தை வீணில் கழிப்பது கெடுதி.
28. கிழவயதில் உண்ண, உழைத்ததில் மீதிபிடி.
29. கீழ்ப்படிதல் உள்ளவன் வாழ்வான் சுகமாய்.
30. குலத்தினுந் தனத்தினுங் குணமே விசேடம்.
31. கூழேயாயினுங் குளித்துக்குடி.
32. கெட்ட தோழரை விட்டகன்றோடு.
33. கேவலச்செய்கையை ஆவலாய் விலக்கு.
34. கைத்தொழிற் கல்வியைக் கற்க ஆசி.
35. கொள்வதைவிடக் கொடுப்பது மேலாம்.
36. கோவிலைக் கண்டால் குனிந்து கும்பிடு.
37. சண்டையைக் கண்டால் அண்டையில் நிற்காதே.
38. சாப்பாட்டுக்கிடையில் சாப்பிடாதே சிற்றுண்டி.
39. சினத்தையடக்க மனதைப் பழக்கு.
40. சீருடன் வாழ ஏருடன் உழைப்பாய்.
41. சுத்தம் எப்போதும் சுகத்தைக் கொடுக்கும்.
42. சூதாடலுஞ் சண்டை செய்தலுந் துன்பமே தரும்.
43. செல்வமிருந்தால் நல்வழியில் செலவழி.
44. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.
45. சொன்னபடி செய்பவன் நல்ல பிள்ளையாவான்.
46. சோம்பல் உள்ளவன் சோற்றுக்கலைவான்.
47. சௌக்கியநிலையைத் தவறவிடாதே.
48. தவமது செய்பவன் பவமது செய்யான்.
49. தாராளமாய்த் தர்மஞ்செய், ஏராளமாய்ப் பலன்பெறுவாய்.
50. திருட்டுத்தொழிலை அறவே ஒழிப்பாய்.

(தொடரும்.)

சூ. ஆரோக்கியசாமி.
போர்டு பெண்பாடசாலை, மானாமதுரை.

தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பக நிலையம்
182280
சென்னை 600 008
ஜூ
2241, NHP
1929-1930

PERMISSU SUPERIORUM.
St. Joseph's Industrial School Press, Trichinopoly. -1929.